පුරවැසි සංවාද
பிரஜைகள் உரையாடல்
Citizen's Dialogue
අංක I இல. I No.
04

# அரகலய: ஒரு தொடரும் பயணம்

கௌஷல்ய குமாரசிங்ஹ



LAW & SOCIETY TRUST
නීතිය හා සමාජ භාරය
சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை

# அரகலய:
# ஒரு
# தொடரும்
# பயணம்

கௌஷல்ய குமாரசிங்ஹ

LAW & SOCIETY TRUST
නීතිය හා සමාජ භාරය
சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை

**அரகலய:** ஒரு தொடரும் பயணம்

@ சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை, 2025

ISBN 978-624-5545-34-6

இந்நூலின் உள்ளடக்கங்கள் அல்லது ஏதேனும் பகுதிகளை வியாபார நோக்கமற்ற தேவைக்காக பிரதி எடுப்பதற்கும் ஆவணம் செய்வதற்கும் அதன் வெளியீட்டாளரின் பொருத்தமான அனுமதியுடன் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது.

**கௌஷல்ய குமாரசிங்ஹ**

மீள்வாசிப்பு மற்றும் சரிபார்த்தல் - விஜய் மாடசாமி

வெளியீடு :

LAW & SOCIETY TRUST
නීතිය හා සමාජ භාරය
சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை

102/3, பார்ன்ஸ் பிளேஸ்,
கொழும்பு 07
தொலைபேசி : +94 11 2691228
+94 11 2684845
+94 11 2684853
தொலைநகல் : +94 11 2686843
மின்னஞ்சல் : info@lstlanka.org
வலைத்தளம் : www.lstlanka.org

# அரகலய: ஒரு தொடரும் பயணம்*

கௌஷல்ய குமாரசிங்ஹ

## அறிமுகம்

பொதுவான அரசியல் நோக்கில், அரகலய என்பது 2022 ஜூலை 09 ஆம் திகதி கோட்டாபய ராஜபக்சவின் ராஜினாமாவுடன் முடிவடைந்த ஒரு நிகழ்வாகவே புரிந்துக்கொள்ளப்படுகிறது. இருப்பினும், வரலாற்றில் மக்கள் மேடையேறிய தனித்துவமான தருணங்களுக்கு அப்பால் பரிணமிக்கும் ஒரு செயல்முறையாக போராட்டத்தைப் புரிந்துக்கொள்வது மார்ச் 2022 முதல் இலங்கை அனுபவித்து வரும் சமூக மாற்றத்தைப் பற்றிய நுணுக்கமான வாசிப்பை வழங்குகின்றதென இவ்வறிக்கை அறிவுறுத்துகிறது. இருப்பினும், ஆளும் உயரடுக்கிற்கும் பொது மக்களுக்கும் இடையிலான சமூக ஒப்பந்தம் முடிந்துவிட்டதாக அறிவிக்க இலட்சக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கிய நிகழ்வின் குறிப்பிடத்தக்க மற்றும் நீடித்த விளைவுகளை இந்த அறிக்கை புறக்கணிக்கவில்லை.

---

* இந்த ஆய்வறிக்கை சட்டம் மற்றும் சமூக நம்பிக்கைக்காக மேற்கொள்ளப்பட்ட அரகலயவிற்குப் பிந்தைய அரசியல் மாற்றம் குறித்த ஆய்விற்கு இடம்பெற்ற களப்பணியின் ஒரு பகுதியை அடிப்படையாகக் கொண்டது. LST இன் நிர்வாக இயக்குநர் கலாநிதி சகுந்தலா கதிர்காமர், LST இன் திட்ட இயக்குநர் சந்துன் துடுகல மற்றும் LST இன் சிரேஸ்ட ஆய்வாளர் விதுர முணசிங்க ஆகியோரின் ஆதரவுக்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கின்றேன். தரவு சேகரிப்பின் போது ஆய்வு உதவியாளராகப் பணியாற்றிய தமித் கொண்டதெனியவின் விலைமதிப்பற்ற உதவியையும் நான் பாராட்ட விரும்புகிறேன்.

அரகலய தொடர்ந்து வளர்ச்சியடைந்ததாகவும், அதன் உத்திகளை மாற்றி, வெவ்வேறு தருணங்களில் புதியவர்கள் இணைந்ததாகவும் இக்கட்டுரை விவாதிக்கிறது. இதன் ஆரம்ப கட்டத்தின் நேரடி ஜனநாயக முறைகள், பிரதிநிதித்துவ ஜனநாயக வழிகளால் மாற்றப்பட்டன. இதன் இரண்டாம் கட்டம் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தியின் (NPP) வெற்றியுடன் முடிவுற்றது. மேலும், அரகலயவின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களில் கற்பனை செய்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு, அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதாகவும், அதில் புதிய பங்கேற்பு ஜனநாயக முறைகள் செயன்முறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் இக்கட்டுரை அனுமானிக்கின்றது.

இக்கட்டுரை, உத்தியோகபூர்வ ஆய்வுகள் மூலம் சேகரிப்பட்ட தகவல்கள்[1], மற்றும் நேரடியான பங்கேற்பு மூலம் சேகரிக்கப்பட்ட உத்தியோகபூர்வமற்ற தகவல்கள்[2] என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மேலும், உரையாடல் மற்றும் இயங்கியலிற்கு ஏனைய உத்தியோகபூர்வ மற்றும் உத்தியோகபூர்வமற்ற தகவல்களுடன் தேர்தல் முடிவுகளும் காத்திரமான தரவுகளை வழங்குகின்றன.

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிறுவனத்திற்காக மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வறிக்கை அரகலயவிற்குப் பிந்தைய அரசியல் மாற்றம் குறித்து நடத்தப்பட்ட களப்பணியின் ஒரு பகுதியை அடிப்படையாகக் கொண்டது. LSTஇன் நிர்வாக இயக்குநர் கலாநிதி சகுந்தலா கதிர்காமர், LSTஇன் திட்ட இயக்குநர் சந்துன் துடுகல மற்றும் LSTஇன் சிரேஸ்ட ஆய்வாளர் விதுர முணசிங்க ஆகியோரின் ஆதரவுக்கு மிகவும் நன்றி உடையவனாவேன். தரவு சேகரிப்பின் போது ஆய்வு உதவியாளராகப் பணியாற்றிய தமித் கொண்டதெனியவின் விலைமதிப்பற்ற உதவியையும் பாராட்டுகிறேன். மேற்கூறிய ஆய்வின் ஒரு பகுதியாக, சேருவில, மாத்தளை, சூரியவெவ, குருநாகல் மற்றும் நீர்கொழும்பு ஆகிய இடங்களில் கட்டமைக்கப்படாத நேர்காணல்களை மேற்கொண்டதுடன் ஒவ்வொரு இடத்திலும் பத்து

1. ஆய்வின் ஒரு பகுதியாக, சேருவில, மாத்தளை, சூரியவெவ, குருநாகல் மற்றும் நீர்கொழும்பு ஆகிய இடங்களில் கட்டமைக்கப்படாத நேர்காணல்களை மேற்கொண்டேன். ஒவ்வொரு இடத்திலும் பத்து நேர்காணல்கள் நடத்தப்பட்டன.
2. ஏப்ரல் 09 ஆம் திகதியிலிருந்து காலி முகத்திடலில் இடம்பெற்ற அரகலயவில் 50 நாட்கள் நேரடியாக பங்குபற்றியிருந்தேன்.

நேர்காணல்கள் நடத்தப்பட்டன. ஏப்ரல் 09 ஆம் திகதியிலிருந்து காலி முகத்திடலில் இடம்பெற்ற அரகலயவில் 50 நாட்கள் நேரடியாக பங்குபற்றி இருந்தேன்.

அரகலயவின் தன்மையை ஆழமாக ஆராய்வதற்கு முன், அதன் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களை தூண்டுவதற்கு காரணமாக அமைந்த அண்மைய உள்ளூர் அரசியல் செயற்பாட்டின் வரலாற்றை சுருக்கமாக பரிசீலிப்பது முக்கியமானதாகும். இந்த வரலாற்றை முக்கியமான இரண்டு விடயங்களிற்குள் உள்ளடக்கலாம். அதேவேளை ஏனைய நிகழ்வுகள் முக்கியம் பெறவில்லை என்பதற்கில்லை. இதன் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களிற்கு இவ்விரண்டு நிகழ்வுகளும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தன. முதலாவதாக, 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலையும், இரண்டாவதாக, ஜேவிபியின் (JVP) உள்ளக மாற்றத்தினையும் குறிப்பிடலாம். அரகலயவுடனான வெளிப்படையான தொடர்புகளைத் தவிர கோட்டாபய ராஜபக்சவின் வெற்றியையும் அவரது ஆட்சி தீர்மானங்களையும் இக்கட்டுரை நேரடியாக குறிப்பிடவில்லை.

2015 ஆம் ஆண்டு பொது வேட்பாளராக போட்டியிடுவதற்காக மைத்திரிபால சிறிசேன எதிரணியில் சேரும்வரை மகிந்த ராஜபக்சவின் ஆட்சி தோற்கடிக்கப்பட முடியாத ஒன்றாகவே இருந்தது. எனவே தேர்தலில் பொது வேட்பாளரின் வெற்றி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை முறியடித்த ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது. மகிந்த ராஜபக்ஷ ஜனநாயக மற்றும் பொருளாதார அமைப்புகளை தாழ்த்தி, அதிகாரத்தை குவித்து வைத்திருந்த முறையை பார்க்கையில், அவர் தோல்வியடைந்து இருக்காவிட்டால் சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுத்திருப்பார் எனச் சுட்டிக்காட்ட முடியும்.

வரலாற்றை மதிப்பிடும் போது கோட்டாபய ராஜபக்ஷ என்ற நபரின் வெற்றிக்கு வழியமைத்த மைத்திரிபால-விக்ரமசிங்க ஆட்சி 2019 இல் முடிவடைந்தாலும், இக்காலகட்டத்தில் ஏற்பட்ட சில மாற்றங்களை மதிப்பீட்டில் தவிக்க முடியாது. உதாரணமாக, 18வது திருத்தத்தை நீக்கி, 19வது அரசியலமைப்பு திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டமையை குறிப்பிடலாம். இந்த 18வது திருத்தம், ஒருவர் எத்தனை முறைகள் ஜனாதிபதியாக இருக்கலாம் என்ற வரையறையை மாற்றியமைத்தல்

உட்பட நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களை பல வழிகளிலும் வலுப்படுத்தியது. 19வது திருத்தம் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களை குறிப்பிட்டளவில் குறைத்திருந்தது. கோட்டாபய ராஜபக்சவினால் 20வது திருத்தம் கொண்டு வந்த பிறகு இவை மீண்டும் பலப்படுத்தப்பட்டன. எனினும், 19வது திருத்தம் மகிந்த ராஜபக்சவுக்கு 2019 தேர்தலில் போட்டியிடத் தடையாக இருந்தது. அதனால், அரசியல் அனுபவமற்ற கோட்டாபய ராஜபக்சவை வேட்பாளராக நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் கட்சிக்கு ஏற்பட்டது. அவருடைய அனுபவக் குறைபாடு வரலாறு கூறும்படியான பல பிரச்சினைகளை மேலும் தீவிரப்படுத்தியிருந்தது.

2015-2019 காலப்பகுதியில், கருத்து வெளியிடும் சுதந்திரம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது. குறிப்பாக இக்காலத்தில் அரசியலை விமர்சிக்க மக்களுக்கு ஒரு மேடையாய் சமூக ஊடகங்கள் இருந்தன. மக்கள் இங்கு அரசியல்வாதிகள் மீதும் அவர்களது தீர்மானங்களின் மீதும் கொண்ட விரக்தியை நகைச்சுவை மீம்ஸ்கள் ஊடாக வெளிப்படுத்தினர். ஆரம்பத்தில் கோட்டாபய ராஜபக்ச, கடுமையான தலைவர் போல தோன்றினாலும், அவரால் சமூக ஊடகங்களின் சுதந்திரத்தை முற்றாக கட்டுப்படுத்த முடியவில்லை. இறுதியில் அரசியலமைப்பின்படி அவரது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னரே அவரது பதவியை முடிவுறுத்திய அரகலயவை தூண்டியமை முக்கிய அம்சமாக இருந்தது.

இந்நிலையில், அண்மையில் முகம்கொடுத்த பாரிய தேர்தல் பின்னடைவிற்குப் பின்னர் அநுரகுமார திசாநாயக்கவின் தலைமையின் கீழ் ஜேவிபி தன்னை மாற்றிக் கொள்ளத் தயாராகியது. போராட்டத்தை அடிப்படையாகக் கொண்ட இடதுசாரி அரசியல் கட்சியாக 1969 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, வன்முறையான அரச அடக்குமுறைக்கு வழிவகுத்த இரண்டு ஆயுதப் போராட்டங்களின் வரலாற்றைக் கொண்ட ஜேவிபி, ஒரு சிறிய எதிர்க்கட்சி என்ற நிலையைக் கடந்து நாட்டை ஆளும் திறன் கொண்ட ஒரு பெரிய அரசியல் சக்தியாக மாற்றமடைவதில் உள்ளார்ந்த கட்டுப்பாடுகளை எதிர்கொண்டிருந்தது. ஜே.வி.பி பரவலாக ஊழலற்ற கட்சியாகக் கருதப்பட்டாலும், பாரம்பரிய உயர்மட்ட அரசியல் கட்சிகளுடன் இணைந்த பிறகே குறிப்பிடத்தக்க தேர்தல் ஆதரவைப் பெற்றது.

இப்பரந்த தேவைப்பாட்டினை பூர்தி செய்யவும், இது சென்றடையாத சமூக வர்க்கத்தினரை சென்றடையவும், தேசிய அறிவுஜீவிகள் அமைப்பை ஜேவிபி (NIO) உருவாக்கியது. இந்த அமைப்பு பல்கலைக்கழக கல்வியியலாளர்களுக்கும், பிரதான அரசியல் கட்சிகளை விமர்சிக்கும் தொழில்சார் நிபுணர்களுக்கும் அரசியலில் ஈடுபட ஒரு வழியை வழங்கியது. ஜேவிபி NIO இனை வழிநடத்தினாலும், அது ஒரு சுயாதீன அமைப்பாகச் செயல்பட்டு, ஏராளமான அறிவுஜீவிகள் மற்றும் நிபுணர்களை ஈர்த்திருந்தது. இது கட்சியின் மாற்றத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்தது.

2015 ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து, பின்னர் பொதுத் தேர்தலில் ஜேவிபியை ஆதரித்த பிரபல கலைஞர்கள் மற்றும் ஆர்வலர்களைக் கொண்ட ஒரு சிவில் சமூக அமைப்பான "அழுத் பரபுரவின்" ஈடுபாடு இந்த மாற்றத்திற்கான முன்னறிகுறியாக இருந்தது. இக்காலகட்டத்தில், ஜே.வி.பி. அதன் பாரம்பரிய கொள்கைகளுடன் முழுமையாக ஒத்துப்போகாத குழுக்கள் மற்றும் தனிநபர்களுடன் புதிய தொடர்புகளை உருவாக்க விருப்பம் காட்டியது. LGBTQ+ சமூகத்துடன் உரையாடலைத் தொடங்கியமை கட்சியின் கொள்கை விரிவாக்கத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். சிவில் சமூகக் குழுக்கள், புத்திஜீவிகள் மற்றும் தொழில் வல்லுனர்களுக்கான திறந்த தன்மை 2019 ஆம் ஆண்டு NPP உருவாவதற்கு வழி வகுத்தது.

இக்காலப்பகுதியில், ஜேவிபி அதன் உரையாடல் பாணியை இடதுசாரி மற்றும் தேசியவாதக் கட்டமைப்பிலிருந்து சமூக ஜனநாயக மற்றும் உலகமயமான கோட்பாடுகளை தழுவும் வகையில் மாற்றியது. பாரம்பரியமாக கிராமப்புறங்களில் வசிக்கும் கீழ்மட்ட சமூகங்களின் ஆதரிப்பை நம்பியிருந்த கட்சி, தற்போது நகரப் பகுதியின் நடுத்தர வர்க்கத்தினரையும் ஈர்க்கத் தொடங்கியது. இத்தகைய மாற்றங்களும், மக்கள் ஆதரவை நோக்கி முன்னேறும் ஒரு முற்போக்கான சக்தியாக மாறினாலும், 2019 ஆம் ஆண்டு தேர்தலில் தேசிய மக்கள் சக்தி (NPP) வெறும் 3% வாக்குகளையே பெற்றது. மேற்குடி அரசியலை ஆதரிக்கும் வலுவான ஆதரவு வலையமைப்புகளும், ஈஸ்டர் தாக்குதலுக்குப் பிந்தைய கோட்டாபயவின் பிரபலமும் NPP இன் எழுச்சியைத் தடுத்திருந்தன.

குறிப்பாக கோட்டாபயவின் முடிவெடுப்புகள் பல்வேறு சமூகக் குழுக்களை விலக்கி வைத்தன. இருப்பினும்,மக்களை அணிதிரட்டுவதை NPP தொடர்ந்திருந்தது. இது பாரம்பரிய அரசியல் கட்சி அல்லது கூட்டணியாக செயல்படாமல், ஒரு மக்கள் இயக்கமாகவே தன்னை நிலைநிறுத்தியது. குறிப்பாக அரகலய அதன் இறுதிக்கட்டத்தை அடைந்த காலத்தில் கோட்டாபய ராஜபக்ச பதவியிலிருந்து விலகிய பின்னர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்று இருந்தார்.

இவ்விரண்டு நிகழ்வுகளும், மார்ச் 2022 இல் அரகலயவால் ஆரம்பிக்கப்பட்ட பெரிய சமூக மாற்றத்திற்கான உத்வேகம் அளித்ததென பரிந்துரைக்கின்றேன். அடுத்தடுத்த பிரிவுகளில், மக்களிடையே அரசியல் விழிப்புணர்வின் முன்னேற்றத்தையும் அரசியல் ஈடுபாட்டு முறைகளின் மாற்றத்தையும் விளக்கும் அரகலயவின் மூன்று நிலைகளில் கவனம் செலுத்துகிறேன்.

## முதல் கட்டம்:
## எதிர்ப்பில் இருந்து அமைப்பு மாற்றத்திற்கான எண்ணம்

மார்ச் 2022 இல் அரகலய தொடங்கிய போது எரிபொருள் வரிசைகள், எரிவாயு பற்றாக்குறை, அடிப்படைப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் மின்வெட்டு போன்றவற்றினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கையின் சாட்சிகளாக அமைந்தன. ஆரம்பத்தில், அரசாங்கத்திடம் அடிப்படைத் தேவைகளை வழங்கக் கோரி தனிநபர்கள் பதாகைகளுடன் பொது இடங்களில் நிற்பதாகக் கூறும் சமூக ஊடகப் பதிவுகள் வெளிவந்தன. இந்த தனிப்பட்ட முயற்சிகள் நூற்றுக்கணக்கான மக்களிடமிருந்து ஆதரவைப் பெற்றன, மேலும் வழக்கமான போராட்டங்களை ஏற்பாடு செய்யும் புதிய குழுக்களும் உருவாக வழிவகுத்தன.

ஜனாதிபதியின் இல்லத்திற்கு அருகில் போராட்டம் நடைபெறும் வரை, நடுத்தர வர்க்க குடிமக்களால் மற்றும் ஒருபோதும் அரசியல் ரீதியாகச் செயல்படாத பலரினால் நடத்தப்பட்ட இந்தப் பாதிப்பில்லாத ஆர்ப்பாட்டங்கள் பெரும்பாலும் தீவிரமாக எடுக்கப்படவில்லை. இருப்பினும், ஜனாதிபதியின் வீட்டிற்கு அருகில் நடந்த போராட்டம் ஒரு

திருப்புமுனையாக அமைந்தது. இந்தச் சிறிய, அமைதியான எதிர்ப்புகள், ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான கோபத்தால் பரவலாக தூண்டப்பட்ட மிகப் பெரிய ஒற்றுமை இயக்கமாக மாற்றமடைந்ததைக் குறிக்கின்றது. முந்தைய போராட்டங்களைப் போல் அல்லாமல், இது அடிப்படைத் தேவைகளை மட்டுமன்றி அரசியல் விழிப்புணர்வில் ஒரு தரமான மாற்றத்தைக் குறிக்கும் வகையில், அரசாங்கம் பதவி விலக வேண்டும் எனும் உறுதியான கோரிக்கையை விடுத்திருந்தது.

எனவே, இத்தருணம் அரசியல் விழிப்புணர்வில் ஒரு தரநிலை மாற்றத்தைக் குறித்தது. மாற்றமடைந்த அரசியல் விழிப்புணர்வு பழைய நிலையை மீட்டெடுக்க வேண்டுமென்ற மட்டுப்படுத்தப்பட்ட கோரிக்கையைத் தாண்டி அது மேலதிக கோரிக்கையை முன்வைத்தது. இதற்குப் பிந்தைய காலத்தில், அந்தக் கோரிக்கை நிறைவேறவில்லை. அடிப்படையில் எந்த தீர்வையும் முன்வைக்காத அரசாங்கம் பதவியிலிருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கை உண்மையான எதிர்ப்பின் செயற்பாடாக இருந்தது, எடுத்துக்காட்டாக, அரசாங்கம் பதவி விலகிய பின் ஆட்சி அதிகாரத்தில் யார் அமர்வார்கள் என்ற கேள்விக்கு எந்த பதிலும் வழங்கப்படவில்லை. எனவே, இந்தப் போராட்டம் நடுத்தர நிலை ஆர்ப்பாட்டத்தில் இருந்து, உண்மையான எதிர்ப்பு உணர்வால் தூண்டப்படும் கோபம்மிக்க மக்கள் கூட்டமாக மாறக்கூடிய சாத்தியத்தைக் குறித்தது.

முதற் தடவையாக சில போராட்ட யுக்திகள் இந்த இயக்கத்தில் பயன்படுத்தப்பட்டன. சமூக இயக்கங்களை ஆய்வு செய்கையில், போராட்ட யுக்திகள் அதிக வெற்றிக்கு வழிவகுக்கிறதா அல்லது அதற்கு மாறாக, அடக்குமுறைக்கு வழியமைக்கின்றதா என்பது பற்றி கேள்விகள் முக்கியமான ஒன்றாக இருக்கின்றது (குயிக்னி-1999). கேம்சனின் (1990) கூற்றுப்படி, நடுநிலையானவற்றை விட போராட்ட யுக்திகள் பெரும்பாலும் வெற்றியுடன் தொடர்புபட்டன. இது இலங்கை போராட்டங்களில் தெளிவாகத் தெரிந்தது. அவை நடுநிலையான முறைகளிலிருந்து சற்று போராட்ட யுக்திகளிற்கு மாறியதால், அரசாங்கம் அவற்றை தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

போராட்ட யுக்திகள் தொடரும்போது அரசாங்கம் ஊரடங்கு உத்தரவுகளை விதித்தது. மக்கள் அதை மீறினர். இது அரசுக்கும் அதன் குடிமக்களுக்கும் இடையிலான சமூக ஒப்பந்தத்தின் குறிப்பிடத்தக்க மீறல்களைக் குறிக்கிறது. குயிக்னி (1999) குறிப்பிடுவது போல, "அரசின் நிலை பாதிப்புக்குள்ளாகும் போது அல்லது சவால்களை ஏற்கும் மனநிலையில் இருக்கும் போது, குழப்பம் (disruption) பயனளிக்கக்கூடும். ஆனால் அவை அப்படி இல்லாதபோது, அதே குழப்பம் அடக்குமுறையை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கும்." குடிமக்களின் சட்ட மறுப்பினைத் தொடர்ந்து அமைச்சரவை ராஜினாமா செய்தமை ஆட்சியின் பாதிப்பை வெளிப்படுத்தியது, எனினும் அது போராட்டங்களை அமைதிப்படுத்த சிறிதளவேனும் உதவவில்லை.

அதற்குப் பதிலாக "கோட்டா-கோ-ஹோம்" என்ற சுலோகத்துடன் ஜனாதிபதியை இராஜினமா செய்யும்படி கோரி ஏப்ரல் 09 ஆம் திகதி காலி முகத்திடலில் ஒரு மில்லியன் மக்களை ஒன்றிணையுமாறு பரப்பப்பட்ட சமூக வலைத்தள பதிவுகளால் முன் எப்போதும் இல்லாதளவில் மக்கள் கூட்டம் உருவானது. ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்தையும் காலிமுகத்திடலின் ஒரு பகுதியையும் ஆக்கிரமித்தனர். குமாரசிங்க (2023) குறிப்பிடுவது போல் போராட்டத்தின் சிதறடிக்கப்பட்ட எதிர்பார்ப்புகளை நிலையாக ஒரே இடத்தில் ஒன்றிணைத்த இந்தநாள் இப்போராட்டத்தின் பரிணாம வளர்சியில் முக்கிய தருணமாகும்.

> *இங்கு பன்மொழிகள் என்பது தெளிவாகத் தெரிந்தது. மேலும் அரசியல் அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்ட கடந்தகால போராட்டங்களில் தனித்துவமாக இருந்த பதாகைகளுக்கு இது முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. வண்ணம் தீட்டிய முகங்கள் மற்றும் உடல்களுடன் "கோ கோட்டா ஹோம்" என்று டிரம்ஸ், கிடார் மற்றும் சாக்ஸபோன்களுடன் பாடும் மக்கள் குழுக்கள் இருந்தனர். போராட்டத்தின் ஒலிக்காட்சி கடந்தகால ஆர்ப்பாட்டங்களைப் போல எதிரொலிக்கவில்லை. கூட்டத்தை கட்டுப்படுத்த ஒரு மையமோ அல்லது தலைமையோ தெளிவாக இருக்கவில்லை. அப்படியிருந்தும், கழிவுகள் சரியான*

*முறையில் தொட்டிகளில் சேகரிக்கப்பட்டன, தேவைப்படும்போது தண்ணீர் விநியோகிக்கப்பட்டது. மாலையில், நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் பிரார்த்தனைகளுடன் கூட்டாக நோன்பு திறந்தனர். கிறிஸ்தவ பாதிரியார்கள் அவர்களுக்கு அருகில் அணிவகுத்துச் சென்றனர். எல்லா இடங்களிலும் தெரியும் தேசியக்கொடி அதன் சிங்கள பௌத்த தேசியவாத அடையாளத்தை இழந்தது போல் தோன்றியது. இந்தக் கூட்டம் பன்முகத்தன்மையைக் கொண்டாடியதால், மக்கள் புதிய வெளிப்பாட்டு வழிகளையும் எதிர்ப்பு முறைகளையும் கண்டுபிடிக்கத் தயங்கவில்லை.*

ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் இடையூறு மற்றும் மிதமான யுக்திகளுக்கு இடையிலான சிறந்த சமநிலை தெளிவாகத் தெரிந்தது. ஒவ்வொரு போராட்ட யுக்தியும் வன்முறையற்றதாகவே இருந்தது, இது ஆர்ப்பாட்ட இயக்கத்தின் நியாயத்தன்மையை வலுப்படுத்தியது. ஆர்ப்பாட்டக்காரர்கள் படிப்படியாக சமூக சமையலறை, கழிப்பறைகள், குழியலறைகள், மருத்துவ மையம் மற்றும் ஊடக மையம் போன்ற தற்காலிக வசதிகளை அமைத்தனர். அவர்கள் ஒரு மக்களவை, நூலகம், சினிமா, திறந்தவெளி அரங்கம், கலையகம், திறந்த ஓலிவாங்கி தளங்கள், பொது பல்கலைக்கழகம் மற்றும் குழந்தைகள் செயல்பாட்டு மையம் ஆகியனவற்றையும் உருவாக்கி இருந்தார்கள்.

மக்களின் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக இந்த இயக்கம் மாறியபின், ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேச மக்கள் தொகை குறைவடைந்தது. இருப்பினும், கலாசார நிகழ்வுகள் மற்றும் கலந்துரையாடல்களுடன் கோஷங்கள் 24/7 நாட்களும் தொடர்ந்தன, இதனால் அந்த இடம் உயிரோட்டமாகவும், சக்தி வாய்ந்ததாகவும் மாறியது. முக்கிய கோஷமான “கோட்டா- கோ- ஹோம்” என்பது அப்படியே இருந்த போதிலும், ஊழல் இல்லாத நாடு, அமைப்பு மாற்றம், இனவெறி இல்லாத சமூகம் போன்றவற்றைக் கோரும் பிற கோசங்களும் எழுந்தன. எனவே, “கோட்டா” என்ற சொல் ஜனாதிபதியின் பெயரின் நேரடி அர்த்தத்தைத் தாண்டிய பல அர்த்தங்களைப் பெற்றது. அக்காலகட்டத்தில் அரசியல் உணர்வு எவ்வாறு படிப்படியாக மாறியது என்பதற்கான அடையாளமாக இந்த மாற்றத்தைக் காணலாம். இது வெறுமனே ஜனாதிபதியையும்

அரசாங்கத்தையும் பதவி விலகக் கோருவதைப் பற்றியதல்ல மாறாக ஒரு புதிய அமைப்பிற்குள் செயல்படும் ஒரு புதிய நாட்டின் கற்பனையாக மாறியது. இருப்பினும், இந்தக் கற்பனை தெளிவற்றதாகவே இருந்தது. மேலும் அதை செயல்படுத்தும் ஓர் அரசியல் திட்டத்தை முன்வைக்க கணிசமான முயற்சிகள் எதுவும் இருக்கவில்லை.

இயக்கத்திற்குள் இருந்த பல்வேறு அரசியல் நிலைப்பாடுகள் காரணமாக, எதிர்காலம் குறித்து ஒருமித்த கருத்தை எட்டுவது சாத்தியமில்லாமல் போனது. இதன் விளைவாக, “அமைப்பு மாற்றம்“ என்பது ஒரு வெற்றுக் குறியீடாகவே இருந்தது, இதனை ஒரு அரசியல் சித்தாந்தத்திற்குள் வேறுபாடுகளை வெளிப்படுத்தும் ஒரு தீவிர மேலாதிக்க தலையீட்டால் மட்டுமே நிரப்பப்பட முடியும்.

இருப்பினும், காலி முகத்திடல் ஆக்கிரமிப்பானது ஜனநாயகத்தில் நேரடியாக வாழும் ஒரு பரிசோதனையாக மாறியது, அங்கு மக்கள் நிகழ்நேரத்தில் (real time) ஜனநாயகக் கொள்கைகளைக் கற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தினர். ஆர்ப்பாட்டக்காரர்கள் வளங்களை நிர்வகிக்கவும், ஒழுங்கைப் பேணவும், குழுக்களாக தங்களை ஒழுங்கமைத்துக் கொண்டனர்.

ஆர்ப்பாட்ட பூமியில் பொதுக் கலந்துரையடல்கள், சொற்பொழிவுகள் மற்றும் கலாசார நிகழ்வுகள் நடத்தப்பட்டன, அவை பொருளாதாரக் கொள்கை, நல்லாட்சி மற்றும் மனித உரிமைகள் போன்ற பிரச்சினைகள் குறித்து குடிமக்களுக்கு அறிவூட்டின. அரசியல் விழிப்புணர்வை வடிவமைப்பதிலும், அதிகரிப்பதிலும் சமூக ஊடகங்களின் பயன்பாடு முக்கிய பங்கு வகித்தன. பேஸ்புக், ட்விட்டர் மற்றும் டிக்டாக் போன்ற தளங்கள் தகவல்களைப் பகிர்வதற்கும், ஆதரவைத் திரட்டுவதற்கும், நிகழ்வுகளை நிகழ்நேரத்தில் ஆவணப்படுத்துவதற்கும் உரிய தளங்களாக மாறின. சமூக ஊடக விவரிப்புகள் அரசின் பிரச்சாரத்திற்கு சவால் விடவும், ஆளும் வர்க்கத்தின் தோல்விகளை பரந்த பார்வையாளர்களுக்கு அம்பலப்படுத்தவும் உதவியது. இந்த பங்கேற்பு செயல்முறை அரசியல் விழிப்புணர்வை விரிவுபடுத்தியது,

மக்கள் அவ்வப்போது வாக்களிப்பதற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல், ஜனநாயகத்தை செயலிலும் மற்றும் பங்களிப்பு நிறைந்ததாகவும் பார்க்க உதவியதென ஒருவரால் ஊகிக்க முடியும்.

ஒரு இயக்கத்தினால் உணர்வோடு ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் குடிமக்கள் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளனர் என்பதை மே 09 ஆம் திகதி வரை மக்கள் புரிந்து கொள்ளவில்லை. அரசாங்க பங்காளிகள் கோட்டாகோகமவைத் தாக்கியபோது, நாடு முழுவதிலும் அதற்கான பதிலடி உடனடியாகக் கிடைத்தது. அண்மித்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் குண்டர்களைத் தாக்க ஒன்றுதிரண்டது மட்டுமல்லாமல், குண்டர்களின் சொந்த கிராமங்களில் உள்ள மக்கள் அவர்கள் தமது ஊருக்கு திரும்பி வரும்வரை கூட்டமாக காத்திருந்தனர். அரச தரப்பு அரசியல்வாதிகளின் பல வீடுகள் மற்றும் தனிப்பட்ட அலுவலகங்கள் தாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. இந்த கோபத்தின் எதிர்வினை செயற்பாடுகள் புவியியல் ரீதியில் பரவலாக இருந்தபோதிலும், நடவடிக்கைகளில் பங்கேற்ற மக்களின் எண்ணிக்கை தெளிவாகத் தெரியவில்லை. எனவே, சக்திவாய்ந்த பதிலடியின் செயல்திறன் ஒரு மர்மமான தோற்றத்தைக் கொண்டிருந்தது. மேலும் இந்தத் தாக்குதல்களுக்குப் பின்னால் ஜேவிபி உள்ளது என்ற சதி கோட்பாடுகளை உருவாக்க அரசாங்கத்திற்கு இடமளித்தது.

ஜூலை 09 ஆம் திகதி இலட்சக்கனக்கான கணக்கான மக்கள் ஜனாதிபதியின் வீட்டை முற்றுகையிட்டபோது, மக்களின் ஒற்றுமையின் அளவு ரீதியான தன்மை வெளிப்படையாக தெரிந்தது.

அரகலயவின் முதல் கட்டம் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் பதவி விலகலுடன் உச்சக்கட்டத்தை அடைந்தது. விக்கிரமசிங்க பின்வுரித்தாளராக பொறுப்பேற்றபோது, சமூகத்தின் விளிம்பு நிலைப் பிரிவின் ஒரு பகுதியினர் அவரை ஆதரித்தனர். ஆனால் பெரும்பான்மையானவர்கள் ஏமாற்றமடைந்தனர். அரகலயவின் நேர்மறையான விளைவுகளைக் குறிப்பிடும்போது, இறுதியில் அது வெற்றிப் பெறவில்லையென பலரும் கூறினர். இருப்பினும், எதிர்ப்பினால் ஜனாதிபதியை வெளியேற்றுவதன் மூலம் பெறப்பட்ட நம்பிக்கை அரகலயவின் விடங்களில் தெளிவாகத் தெரிந்தது.

## இரண்டாம் கட்டம்:
## அரசியல் திட்டமாக அமைப்பு மாற்றம்

இரண்டாம் கட்டம், மக்கள் படிப்படியாக அரகலய போராட்டத்தின் கனவை தேசிய மக்கள் சக்தி (NPP) என்ற அரசியல் கட்சி-சமூக-இயக்கத்தில் தேடத் தொடங்கியதுடன் ஆரம்பமானது. இந்த கட்சி முன்னர் ஒருபோதும் நாட்டை ஆளும் அளவுக்கு வாக்குகளைப் பெற்றிருக்கவில்லை. இந்தக் கட்டத்தை காட்சிப்பகட்டான நிகழ்வுகள் இல்லாத ஒரு மௌன கட்டமாக விவரிக்கலாம். முதல் கட்டத்தின் எதிர்ப்பு உணர்வு மெல்ல மெல்ல அரசியல் உணர்வாக மாறியதுடன் இது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் புதிய நம்பிக்கையை வைத்தது. அரகலய அகற்ற முற்பட்ட ஊழல் எச்சங்களை உருவகப்படுத்திய விக்ரமசிங்க மற்றும் அவரது அரசாங்கத்தின் தொடர்ச்சியான இருப்பு இந்தச் செயல்முறையை எளிதாக்கியது.

இக்கட்டுரையின் முன்னுரையில் குறிப்பிட்டபடி, பூரணமின்மை என்ற எண்ணம் அரகலயவில் பங்கேற்ற குடிமக்களை தொந்தரவு செய்த காலகட்டத்தில் JVP பல்வேறு சமூக வர்க்கங்களையும் குழுக்களையும் அணிதிரட்டும் திறன் கொண்ட ஒரு கட்சி-இயக்கமாக பரிணமித்ததோடு இது ஒரு முக்கியமான திருப்புமுனையாக அமைந்தது. எனவே NPP இன் தலையீடானது அரகலயவின் கனவு இலக்குகளை அடைவதை இலக்காகக் கொண்ட அரசியல் திட்டத்தை வழங்கி மக்களின் அரசியல் உணர்வை மாற்றுவதற்கான வளமான அடித்தளத்தை நிலைநிறுத்தியது.

இந்தத் தலையீட்டில் இரண்டு முக்கியமான இடங்களை அடையாளம் காணலாம்: முதலாவது, “அமைப்பு மாற்றம்”. ஒப்பீட்டளவில் வெற்று குறியீடான கருத்தியலாகும். இரண்டாவதாக, வாக்குகளை திரட்டுவதற்கு அத்தியாவசியமான அரசியல் நிறுவன வலையமைப்புகளின் இடமாகும். இந்த இரண்டு இடங்களும் ஒன்றுக்கொன்று பரஸ்பர வேறுபாடு கொண்டனவையல்ல என்பதை புதிதாக சொல்லத் தேவையில்லை.

கருத்தியலின் அடிப்படையில், செல்வாக்குமிக்க அனைத்து பாரம்பரிய அரசியல் கட்சிகளும் ஆளும் வர்க்கமும் ஊழல் நிறைந்தன, உணர்வற்றன மற்றும் திறனற்றன என்று NPP வெளிப்படுத்தியது. பல

தசாப்தங்களாக JVP அதன் அரசியலில் பரப்பிய விமர்சனங்களுடன் வலுவாக எதிரொலித்த ஒரு கருத்தாகும். இருப்பினும், NPP இன் தேர்தல் விஞ்ஞாபனம், மற்றும் பிரச்சாரங்கள் அதன் முந்தைய பிரச்சாரங்களில் தெரிந்த சோசலிச சொல்லாட்சியை குறிப்பிடத்தக்களவில் தவிர்த்தது. உயங்கொடவின் கூற்றுப்படி, சோசலிசம் மட்டுமல்ல, மற்ற வகையான நிலையான அரசியல் கருத்தியல் சொல்லாட்சிகளும் வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டதாகத் தோன்றுகிறது. அதற்கு பதிலாக அந்த மொழி எந்தவொரு குறிப்பிட்ட அரசியல் சித்தாந்த திசைக்கும் விசுவாசத்தைக் காட்டாமல் பெரும்பாலும் நடுநிலையாகவே இருந்தது. எந்தவொரு குறிப்பிட்ட அரசியல் கருத்தியல் திசையிலும் விசுவாசத்தைக் குறிக்கவில்லை. மேலும், பாரம்பரிய கருத்தியல் வகைகள் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமையை பகுப்பாய்வு செய்வதில் காலாவதியானவையென அவர் கூறுகிறார்.[3] இந்த நடுநிலை இருந்தபோதிலும், அரகலயவின் முதல் கட்டத்தில் முன்னர் வெற்று குறியீடாக இருந்த முறைமை மாற்றம் என்ற சொல்லுக்கு NPP கணிசமான கருத்தியல் உள்ளடக்கத்தை வழங்கியது.

அரகலயவுக்குப் பிந்தைய காலகட்டத்தில், NPP தனது தேர்தல் பிரச்சாரத்தின் மைய குறிக்கோளாக மறுமலர்ச்சியின் புதியயுகம் (நவ புனருத யுகயக்) என்ற சொல்லை உருவாக்கியது. மறுமலர்ச்சி சொல்லாட்சியின்படி, NPP இன் தேர்தல் வெற்றி இந்த புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் எனவும், சமூகத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் குறிப்பாக கல்வி, சுகாதாரம், உற்பத்தி பொருளாதாரம், போக்குவரத்து, கலை மற்றும் கலாசாரம் உட்பட சமத்துவம், பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை நோக்கிய சீர்திருத்தம் மற்றும் அரசியல்வாதிகள் உட்பட அனைவரும் சட்டத்தின் ஆட்சிக்கு உட்பட்டிருப்பார்கள் என்றும் அனைத்து வகையான ஊழல்களும் ஒழிக்கப்பட்டு பொருளாதார செழுமையை அடையக்கூடியதாக மாற்றும் இருக்கும் என்றும் பிரச்சாரம் உறுதியளித்தது. இந்த கருத்தியலை NPP அரசாங்கத்தின் கீழ் நிறைவேற்றக்கூடிய அரசியல் திட்டமாக முன்வைத்ததன் மூலம், கட்சி பரவலான ஆதரவை ஈர்த்தது. முன்னர் குறிப்பிட்டபடி, இந்த திட்டம் சோசலிசத்தின் எந்த அடையாளத்தையும்

3. நவம்பர் 9, 2024 அன்று சட்டம் மற்றும் சமூக நம்பிக்கையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இந்தக் கருத்தைக் குறிப்பிட்டார்.

கொண்டிருக்கவில்லை மற்றும் தளர்வான அர்த்தத்தில் சமூக ஜனநாயகத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. NPP இன் இரத்தக்கறை படிந்த புரட்சிகர கடந்த காலத்தையும் மற்றும் அபாயகரமான அரசியல் எதிர்காலத்தையும் கொண்ட அதி-மார்க்சிய குழுவாக சித்தரிக்கும் பிற அரசியல் கட்சிகளின் எதிர்-கதைகள் இருந்தபோதிலும், அவர்களின் கொள்கைகளில் தீவிர இடதுசாரி இலட்சியங்களை உணராததால் மக்கள் அவர்களுக்கு வாக்களித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஓர் அரசியல் கட்சி மற்றும் மக்கள் இயக்கம் இரண்டாகவும், NPP பல பிரிவுகள் மூலம் செயல்படுவதாக கூறியது. ஓர் அரசியல் கட்சியாக, அது கிராமமட்டம் வரை நீட்டிக்கப்பட்ட குழுக்களின் வலையமைப்பை நிறுவியிருந்தது. கூட்டங்கள் மற்றும் விளம்பர பிரச்சாரங்களை ஒழுங்கமைப்பதில் பல்வேறு துறைகளில் செயற்பட்டு வந்த JVP செயற்பாட்டாளர்களும் பல்வேறு வலையமைப்புகளின் திறனும் முக்கிய காரணிகளாக இருந்தது. கட்சி பொறிமுறை மக்களை ஒழுங்கமைத்த போது, பெண்கள், இளைஞர்கள், கலைஞர்கள் மற்றும் பல்கலைக்கழக கல்வியியலாளர்கள் போன்ற இயக்கத்தின் பல்வேறு பிரிவுகள் அதன் மேம்பாட்டிற்கு பங்களித்தன.

இருப்பினும், ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பு இடம்பெற்ற நேர்காணலின் அடிப்படையில், கிராமமட்ட NPP வலையமைப்புகள் திறம்பட மக்களை சந்தித்து இருக்கவில்லை. தேர்தல் பிரச்சாரத்தின் போது ஏனைய அரசியல் கட்சிகள் குறைவான செயல்பாட்டில் இருந்தன என்பதை ஒப்புக்கொண்டாலும், சேருவில, மாத்தளை மற்றும் சூரியவவ பிரதேசங்களில் பதிலளித்தவர்களில் பெரும்பகுதியினர் NPP மக்களுடன் அதிகளவில் தொடர்பினை கொண்டு இருந்திருக்க வேண்டுமென புகார் செய்தனர். இப்பகுதிகளில், NPP இனை ஆதரிக்க விரும்பும் ஆனால் கட்சியுடன் தொடர்பு ஏற்படுத்துவதற்கான அணுகல் இல்லாத நபர்கள் இருக்கிறார்கள் என பதிலளித்தவர்கள் தெளிவாக சுட்டிக்காட்டினர். இங்கு ஏமாற்ற உணர்வு இருந்தபோதிலும், பெரும்பாலானோர் NPP இற்கு வாக்களிப்பதாகவும் அது வெற்றி பெறும் என எதிர்பார்ப்பதாகவும் கூறினர். இந்த ஏமாற்றம் அவர்கள் இயக்கத்தின் பகுதியாக இருக்க வேண்டும் என்ற விருப்பத்தின் சான்றாகும்.

இந்நபர்களில் பலர் முந்தைய பிரச்சாரங்களில் SLPP மற்றும் கோட்டாபய ராஜபக்சவிற்காக செயல்பட்டிருந்தனர். அது மட்டுமல்லாமல், தேர்தலில் வெற்றி பெறுவதற்காக SLPP நிறுவிய ஆதரவு வலையமைப்புகளுக்குள்ளும் நிலைநிறுத்தப்பட்டிருந்தனர்.

பாரம்பரிய செல்வாக்குமிக்க அரசியல் கட்சிகள் காலப்போக்கில் கட்டமைத்து வலுப்படுத்திய ஆதரவு வலையமைப்புகள் மூலம் குடிமக்களை எவ்வாறு அணிதிரட்டியுள்ளன என்பதை புரிந்துகொள்வது முக்கியம். இலங்கையில் வாக்காளர்-கட்சி தொடர்பை விரிவாக ஆராய்ந்த பிரிஸ் (2024), இதை பின்வருமாறு கூறுகிறார்:

> *அரசியல் கட்சிகள் பற்றிய சமீபத்திய இலக்கியங்களைப் பார்த்தால் அவை மரண நலன்புரி சங்கங்கள், கடன் குழுக்கள், மத அமைப்புகள், முறைசாரா சாதி மற்றும் குடும்ப வலையமைப்புகள் மற்றும் சட்டவிரோத குற்றச் செயல்களை ஆதரிக்கும் வலையமைப்புகள் உட்பட சமூக தொடர்புகளின் சிக்கலான வலையமைப்பு மூலம் வாக்காளர்களுடன் தொடர்புபடுகின்றன என்பதை முதன்மைப்படுத்தி காட்டுகின்றன.*

ஒவ்வொரு அரசியல் கட்சியிலும் வெவ்வேறு மட்டங்களில் உள்ள தலைவர்கள் கிராமங்களில் உள்ள முக்கிய செயல்பாட்டாளர்களை அனுசரணை சலுகைகளை வழங்குவதற்கும் வாக்குகளை ஒழுங்கமைப்பதற்கும் இந்த வலையமைப்புகளை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்றும் அவர் விளக்குகிறார். இந்த இடைத்தரகர்கள் கட்சி/அரசியல்வாதி மற்றும் வாக்காளர்கள் இருவரின் நலன்களையும் நிறைவேற்றுவதில் முக்கியமான முகவர்களாக ஆகின்றனர். ஜனாதிபதி தேர்தலில் NPPஇன் நெருக்கமான வெற்றியைத் தொடர்ந்து, இந்த பகுப்பாய்வை நம்பி, தேசியளவிலான பிரச்சாரம் தீர்க்கமான பங்கு வகித்த ஜனாதிபதி தேர்தலைப் போலன்றி, நாடாளுமன்ற தேர்தலில், NPP தனியாக அரசாங்கம் அமைக்க போதுமான வாக்குகளைப் பெறுவதில் சிரமப்படும் என பீரிஸ் ஊகித்தார். இது நிறுவப்பட்ட கட்சிகளைப் பாதுகாக்கும் பாரம்பரிய ஆதரவு வலையமைப்புகளின் செல்வாக்கின் காரணத்தினாலாகும். இருப்பினும், நமக்கு இப்போது தெரிந்தபடி, பொதுத் தேர்தல் முடிவுகள்

பீரிஸ் போன்ற அரசியல் ஆய்வாளர்களை மட்டுமல்ல, NPPஇன் சொந்த அனுதாபிகளையும் ஆச்சரியப்படுத்தியது. முன்னர் ஒருபோதும் சிங்கள-பௌத்த பெரும்பான்மை கட்சிக்கு வாக்களித்திராத வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளின் ஆதரவு உட்பட, நாடு முழுவதும் முன்பொருபோதுமில்லாத வாக்குகள், இந்தத் தேர்தலில் பாரம்பரிய செல்வாக்குமிக்க கட்சிகளைப் பாதுகாக்கும் தேர்தல் பொறிமுறைகள் செயல்படுவதை நிறுத்திவிட்டன என்பதை வெளிப்படுத்தியது.

பதிலளித்தவர்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல்களை மீண்டும் பரிசீலிப்பது அரகலயவின் போது ஆதரவு வலையமைப்புகளின் சிதைவு பற்றிய முக்கியமான உள்ளார்ந்த விடயங்கள் பற்றிய அறிவினை வழங்குகிறது. குறிப்பிடத்தக்க சம்பவமொன்றில் SLPP இன் ஆதரவாளர் வலையமைப்பில் தீவிரமாக இணைந்திருந்த ஒருவரின் பதிலையும் உள்ளடக்கி இருந்தது. தேர்தலில் கட்சியின் வெற்றிக்குப் பிறகு, அவருக்கு இலாபத்தை தரக்கூடிய மணல் அகழ்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இது புரவலர்-ஆதரவாளர் கட்டமைப்பிற்குள் அரசியல் விசுவாசத்திற்கு எவ்வாறு வெகுமதி அளிக்கப்பட்டது என்பதற்கு ஒரு முக்கிய உதாரணமாகும். அரகலயவின் ஆரம்ப கட்டங்களில், இந்த பதிலளித்தவர் ஒரு தார்மீக மற்றும் அரசியல் இக்கட்டான நிலையை எதிர்கொண்டார். ஒருபுறம், SLPP உடனான அவரது தொடர்புகள் விசுவாசத்தை கோரின மறுபுறம், அதிகரித்துவரும் பசளை நெருக்கடி மற்றும் மோசமடைந்து வரும் பொருளாதார உறுதியின்மை அவரது வாழ்வாதாரத்தையும் சமூகத்தையும் நேரடியாக பாதித்தன. எதிர்ப்பு இயக்கத்துடன் அதிகமான மக்கள் இணைந்து அவரது பகுதியில் அரகலய உத்வேகம் பெற்றபோது, SLPP இன் ஆட்சியின் மீதான அவரது ஏமாற்றம் அதிகரித்தது. இருந்தபோதிலும், அவர் ஆரம்பத்தில் வெளிப்படையாக பங்கேற்பதைத் தவிர்த்தார். இது ஒருகாலத்தில் அவருக்கு நன்மை செய்த அமைப்புடனான உறவுகளை துண்டிப்பது குறித்த தொடர்ச்சியான தயக்கத்தை பிரதிபலித்தது.

மே 09 ஆம் திகதி, SLPP உடன் இணைந்த குண்டர்களால் காலி முகத்திடலில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து ஒரு திருப்பம் ஏற்பட்டது. உடனடி அடிமைத்தனத்தின் நாடகமான

சந்தர்ப்பத்தில், தாக்குதலை மேற்கொண்டு திரும்பி வரும் நபர்களை எதிர்கொள்ளவும் பதிலடி கொடுக்கவும் நெடுஞ்சாலை நுழைவாயிலுக்கு அருகே கூடியிருந்த ஒரு கூட்டத்துடன் அவர் சேர்ந்தார். இந்த செயல் அவரது அரசியல் நடத்தையில் ஒரு குறிப்பிடத்தக்க முறிவைக் குறித்தது. அவரது முடிவு நடைமுறை கவலைகளால் உந்தப்பட்டது என்று சிலர் வாதிடலாம். மற்றவர்களைப் போலவே அவரது வணிகமும் பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டது. அவரது செயல்கள் சுயநலத்தைத் தாண்டிது என்பது தெளிவாகிறது. SLPP உடன் இணைந்த நபர்களைத் தாக்குவதும், கட்சியின் இயந்திரத்திலிருந்து தன்னைத் தூர விலக்கிக் கொள்வதும், அவர் ஒரு காலத்தில் நம்பியிருந்த புரவலர் முறையைத் துணிச்சலான மற்றும் பகிரங்கமாக நிராகரிப்பதைக் குறிக்கிறது.

இந்த மாற்றம் ஆழமான மற்றும் மேம்பட்ட அரசியல் அகநிலையின் வடிவத்தை உயர்த்திக் காட்டுகிறது. SLPP ஆதரவாளர்களுக்கு எதிராக நேரடியான, மோதல் நடவடிக்கையில் பங்கேற்க அவரது விருப்பம் பொருளாதார விரக்தியைக் காட்டிலும் அதிகமானது. இது அரகலயவின் கொள்கைகள் மற்றும் வேகத்துடன் வளர்ந்து வரும் இணைப்பைப் பிரதிபலிக்கிறது. இந்த முன்னேற்றம் தனிப்பட்ட ஏமாற்றத்திலிருந்து கூட்டு எதிர்ப்பு செயலில் பங்கேற்பது வரை - இயக்கத்தின் மாற்றும் சக்தியை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. நெருக்கடி தருணங்களில் ஆதரவாளர்-வாடிக்கையாளர் வலையமைப்புகளின் சரிவு அரசியல் அகநிலையில் ஆழ்ந்த மறுசீரமைப்புகளுக்கு எவ்வாறு வழிவகுக்கும், தனிநபர்களை சுயநலத்தைத் தாண்டி அமைப்பு ரீதியான மாற்றத்துடன் பரந்த அடையாளத்தை நோக்கி நகர்த்துகிறது என்பதை அவரது கதை நிரூபிக்கிறது.

மே 09 ஆம் திகதியன்று, அரசியல்வாதிகளின் தனியார் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்ட போது, இந்த உறவுகளின் முக்கியமான மற்றும் அடையாளப்பூர்வமான துண்டிப்பை குறித்தன. இந்த உறவுகள் சிதைந்தபோது, புரவலர்-ஆதரவாளர் வலையமைப்புகளுக்குள் இருந்த முக்கிய செயல்பாட்டாளர்கள் அரசியல் ரீதியாக ஓரங்கட்டப்பட்டனர்.

அரகலயவின் இரண்டாம் கட்டத்தில், தேசிய மக்கள் சக்தி (NPP) இந்த குழப்பத்தை பயன்படுத்தி இச்செயல்பாட்டாளர்களை தங்களின் மாற்றம்

சார்ந்த அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குள் திரட்டியது. விசுவாசத்தைப் பெறுவதற்காக பொருளாதார வெகுமதி பற்றிய வாக்குறுதிகளில் நம்பிக்கை கொண்டிருந்த பாரம்பரிய கட்சிகளைப் போலன்றி, NPP அரசியல் பங்கேற்பின் அடிப்படையில் வேறுபட்ட மாதிரியை முன்வைத்தது. முன்னர் புரவலர்-ஆதரவாளர் கட்டமைப்பிற்குள் செயற்பட்ட கணிசமான எண்ணிக்கையிலான செயற்பாட்டாளர்களைத் தங்கள் அரசியல் பொறிமுறையில் இணைப்பதில் அது வெற்றி கண்டது. தங்களின் முந்தைய சலுகைகளிலிருந்து நீக்கப்பட்ட இந்த நபர்கள், உடனடி ஆதரவு எதிர்பார்ப்புகளால் அல்ல, மாறாக முறையான மாற்றத்தின் பரந்த பார்வையுடன் தங்களை இணைத்துக் கொண்டதால் NPP இன் பிரச்சாரங்களில் தீவிரமாக சேர்ந்தனர்.

ஆதரவு வலையமைப்புகளின் சிதைவு மக்களின் தேர்தல் நடைமுறைகளில் ஒரு முக்கிய மாற்றத்தை குறித்தது. அத்தோடு தேர்தல் அரசியலிற்குள் அவர்களின் பழக்கவழக்கங்களில் தீர்க்கமான மாற்றத்தையும் சுட்டிக்காட்டியது. இம்மாற்றம், வரலாற்று ரீதியாக பாரம்பரிய அரசியல் மேல்வர்க்கத்தின் ஆதிக்கத்துடன் மக்களை பிணைத்திருந்த உள்ளார்ந்த மனப்பான்மைகள் மற்றும் நடைமுறைகளின் மீளுருவாக்கப்பட்ட கட்டமைப்பாக புரிந்துகொள்ள முடியும். பல தசாப்தங்களாக, இந்த மேல்வர்க்கத்திற்குள் தேர்தல் சமர்ப்பிப்பு ஆழமாக பதிக்கப்பட்ட அதிகார கட்டமைப்புகளால் வடிவமைக்கப்பட்டது, வரலாற்று செயல்முறைகள் மூலம் உருவானது, அத்தகைய வடிவங்களை இயற்கையாகவும் தவிர்க்க முடியாததாகவும் தோன்றுகிறது.

ஆளும் செல்வாக்குமிக்க மேல்வர்க்கத்தின் ஊழல் குறித்த கருத்தியல் தலையீடுகள் மற்றும் அரசியல் அறிவின் பரப்புதல் பரவலாக இருந்தபோதிலும், இந்த அதிகார கட்டமைப்புகளின் சுழற்சி மீளுருவாக்கத்தை நீக்குவதற்கு அவை போதுமானதாக இல்லை என்பது நிரூபணமானது. கூட்டு நடவடிக்கையிலிருந்து பிரிக்கப்படும்போது, அரசியல் விழிப்புணர்வால் மட்டும் மேல்வர்க்கக் கட்டுப்பாட்டைத் தக்கவைக்கும் குறியீட்டு ஆதிக்கத்தின் வழிமுறைகளை சீர்குலைக்க முடியாது என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. அரகலயவிற்குள் உருவாக்கப்பட்ட புதிய அரசியல் அகநிலையின் தோற்றத்தின் மூலம் மட்டுமே இந்த முறிவு சாத்தியமானது. கூட்டு நடவடிக்கையில்

வேரூன்றிய உயர்ந்த அரசியல் உணர்வை வளர்ப்பதன் மூலம், அரசியல் செயல்பாட்டின் மறுகற்பனையை எளிதாக்கி, ஆளும் மேல்வர்க்கத்தின் தேர்தல் வெற்றியை நிலைநிறுத்திய, வேரூன்றிருந்த சுழற்சியை முறித்து அரகலய உள்மயமாக்கப்பட்டிருந்த அடிபணிவின் கட்டமமைப்பினை சவாலுக்கு உட்படுத்தியது.

மக்கள் இயக்கமாக, NPP கூட்டு இயக்கவியலை தனது எல்லைக்குள் கட்டுப்படுத்தி, அரகலயவின் முதல் கட்டத்தில் உருவாக்கப்பட்ட அரசியல் அகநிலையை வலுப்படுத்துவதில் வெற்றி கண்டது. விக்கிரமசிங்க மற்றும் அவரது அரசாங்கம் அரகலயவின் விளைவுகளை மாற்றியமைக்க முயன்றபோதிலும், ஓர் இயக்கமாக NPP அதன் நேர்மறையான விளைவுகளை பாதுகாப்பதில் மட்டுமல்லாமல் அவற்றை மேம்படுத்துவதிலும் வெற்றி பெற்றது. சிதைந்த வலையமைப்புகள் அரகலயவின் முதல் கட்டத்தின் நேரடி ஜனநாயக கூட்டு நடைமுறைகளின் நேரடி விளைவாக இருந்தபோதிலும், இரண்டாம் கட்டத்தில், இந்த வெற்றிடத்திற்குள் புதிய அரசியல் தொடர்புகளை உருவாக்க NPP தலையிட்டு, மாற்று தேர்தல் அரசியலை சாத்தியமாக்கியது. இந்தக் கட்டம், NPP இன் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் இரண்டிலும் வெற்றி பெற்றதுடன் முடிவுக்கு வந்தது.

### மூன்றாம் கட்டம்:
### முறைமை மாற்றத்தை உருவாக்குதல்

உண்மையிலேயே முறைமை மாற்றத்தை நோக்கி நகர்வதற்கு, அரகலயவால் ஆரம்பிக்கப்பட்ட மாற்றம் அரசியல் உணர்வுக்கு அப்பால் நீட்டித்து நிர்வாகத்தின் கட்டமைப்பு பரிமாணங்களுக்குள் விரிவடைய வேண்டும். இதற்கு நிர்வாகம் செயற்படுத்தப்படும் நிறுவனங்கள், வழிமுறைகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மீள்கற்பனை செய்ய வேண்டியுள்ளது. அரகலய இத்தகைய சீர்திருத்தங்களுக்கு பொருத்தமான சூழலை உருவாக்கியுள்ளது, மேலும் ஓர் அரசாங்கத்தின் கீழ், குடிமக்களின் பங்கேற்பை மதிக்கும் மற்றும் ஊக்குவிக்கும்

ஒரு புதிய நிர்வாக மாதிரியை உருவாக்குவதற்கான சாத்தியம் உள்ளது. இந்த தொலைநோக்கினை மூன்று முக்கிய மட்டங்களில் யதார்த்தமாக்கிக்கொள்ளலாம்.

### 1. கிராமளவிலான முடிவெடுக்கும் செயல்முறைகளில் குடிமக்களை இணைத்தல்

கிராமம் மட்டத்தில் நிர்வாக பங்கேற்பு ஜனநாயகத்தின் ஒரு மூலக்கல்லாக மாறும் ஆற்றலைக் கொண்டுள்ளது. வள ஒதுக்கீடு, உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பொதுச் சேவைகள் போன்ற உள்ளூர் பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்க கிராமளவில் பங்கேற்பு குழுக்களை நிறுவுவதன் மூலம் இதை சாத்தியமாக்கலாம். குடிமக்கள் உள்ளூர் நிதி எவ்வாறு ஒதுக்கப்படுகிறது என்பது தொடர்பாக கருத்து தெரிவிக்கும் அளவிற்கு கிராமளவிலான வரவு-செலவுத் திட்டங்கள் வெளிப்படையானதாகவும் பங்கேற்புடையதாகவும் இருப்பதை உறுதி செய்தல். உள்ளூர் பிரதிநிதிகள் வழக்கமான மதிப்பாய்வுகள், பின்னூட்டலகள் அமர்வுகள் மற்றும் குறைதீர்க்கும் வழிமுறைகள் மூலம் கிராம மக்களால் பொறுப்புக் கூறப்படும் தளங்களை உருவாக்குதல். முடிவெடுப்பதில் பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுபான்மையினர் போன்ற விழிம்புநிலைக் குழுக்களின் பங்கேற்பிற்கு முன்னுரிமை அளித்தல், அவர்களின் கண்ணோட்டங்கள் மற்றும் தேவைகள் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.

இந்த அணுகுமுறை அதிகாரத்தை பரவலாக்குவது மட்டுமல்லாமல், அடிமட்டளவில் ஜனநாயகக் கொள்கைகளை உள்ளடக்கி குடிமக்களிடையே உரிமை மற்றும் பொறுப்புணர்வையும் வளர்க்கிறது.

### 2. அரசாங்க நிறுவனங்களில் முடிவெடுக்கும் செயல்முறைகளில் அதிகாரிகளை இணைத்தல்

அரசாங்க நிறுவனங்கள் பெரும்பாலும் அதிகமாக படிநிலை அமைப்பு கொண்டனவையாகவும் மாற்றத்திற்கு எதிர்ப்புடையனவையாகவும் விமர்சிக்கப்படுகின்றன. இந்நிலையில் நிர்வாகத்தை மாற்றுவதில் பின்வரும் விடயங்கள் முக்கியம் பெறுகின்றன. அரசாங்க நிறுவனங்களுக்குள் பல்வேறு நிலைகளில் உள்ள அதிகாரிகள் முடிவெடுக்கும் செயல்முறைகளில் பங்களிக்கக்கூடிய தளங்களை

உருவாக்குதல், பல்வேறு நிபுணத்துவம் மற்றும் கள அறிவு கொள்கைகளில் இணைக்கப்படுவதை உறுதி செய்தல், பங்கேற்பு நிர்வாகத்தில் ஈடுபடுவதற்கான திறன்களுடன் அதிகாரிகளை தகுதி உடையவர்களாக்குதல், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் பதிலளிக்கக்கூடிய தன்மையை வலியுறுத்துதல் பல்வேறு நிலைகளில் உள்ள அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிப்பதன் மூலம் அதிகப்படியான மையப்படுத்தலைக் குறைத்தல்.

### 3. கொள்கை உருவாக்கும் செயல்முறைகளில் சிவில் சமூக அமைப்புகளின் கருத்துக்களை இணைத்தல்

சிவில் சமூக அமைப்புகள் (CSOs) பெரும்பாலும் பல்வேறு நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தி, சமூகத் தேவைகள் குறித்த தீர்க்கமான உள்ளார்ந்த விடயங்கள் பற்றிய அறிவினை வழங்கி அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையிலான பாலமாகச் செயற்படுகின்றன. கொள்கை உருவாக்கத்தில் அவற்றின் சேர்ப்பை பின்வருவனவற்றின் மூலம் அடையலாம்: கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் சமூக நீதி போன்ற கொள்கைப் பகுதிகளில் ஆலோசனை வழங்க பல்வேறு சிவில் சமூக அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனை சபைகளை நிறுவுதல். கொள்கைகளை உருவாக்கவும் அல்லது செயல்படுத்தவும் முன்பு சமூகங்களிடமிருந்து உள்ளீடுகளை சேகரிப்பதற்காக சிவில் சமூக அமைப்புகளால் வசதியளிக்கப்படும் பொது ஆலோசனைகளை நடத்துதல். கொள்கை ரீதியான தீர்வுகள் புத்தாக்க ரீதியிலானவை மற்றும் யதார்த்த பூர்வமானவை என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு இனப்பிரச்சினை, பாலின சமத்துவம் அல்லது மலையக தமிழ் சமூகத்தின் நலன்கள் போன்ற குறிப்பிட்ட பிரச்சினைகளில் கவனம் செலுத்தும் சிவில் சமூக அமைப்புகள் பனிக்குழுக்களை உருவாக்குதல். அரசாங்க திட்டங்கள் திறம்பட செயல்படுத்தப்படுவதையும் அவற்றின் நோக்கங்களை பூர்த்தி செய்வதையும் உறுதி செய்வதற்காக கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கு சிவில் சமூக அமைப்புகளை ஈடுபடுத்துதல்.

இந்த ஒத்துழைப்பானது நம்பிக்கையை வளர்ப்பதோடு கொள்கைகள் சமூகத்தின் தேவைகளையும் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கும் அதேவேளையில் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்ப உதவும்.

அரகலய போராட்டமானது ஏற்கனவே அரசியல் உணர்வை மீள்வடிவமைத்துள்ளது. ஆனால் அமைப்பு மாற்றத்திற்கு இந்த பங்கேற்பு கொள்கைகளை நிர்வாகத்தின் அமைப்பிற்குள் உள்வாங்க தேவைப்படுகிறது. பல நிலைகளில் முடிவெடுப்பதில் குடிமக்கள், அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலம், NPP அரசாங்கம் அரகலய போராட்டத்தின் அபிலாஷைகளை பிரதிபலிப்பது மட்டுமல்லாமல் நிலையான, உள்ளடக்கிய மற்றும் ஜனநாயக மாற்றத்திற்கான அடித்தளத்தையும் அமைக்கும் ஒரு நிர்வாக மாதிரியை உருவாக்க முடியும்.

## முடிவுரை

இக்கட்டுரை அரகலய போராட்டத்தின் ஜூலை 09 ஆம் திகதியின் அற்புதமான நிகழ்வுடன் உச்சத்தை அடையவில்லை, மாறாக தனது தந்திரோபாயங்களை மாற்றி, புதிய செயற்பாட்டாளர்களை பல்வேறு கட்டங்களில் இணைத்துக்கொண்டு செயற்திறனுடன் பரிணமித்துள்ளதென வாதிட்டுள்ளது. நேரடி ஜனநாயக முறைகள் மற்றும் அடிமட்ட அணிதிரட்டல் ஆகியவற்றை இலட்சணங்களாகக் கொண்ட ஆரம்ப கட்டம், அரகலய போராட்டத்தின் அபிலாஷை கள் பிரதிநிதித்துவ ஜனநாயக செயல்முறைகள் மூலம் இரண்டாம் கட்டத்திற்கு இடம் கொடுத்தது. இம்மாற்றம் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க தருணத்தை குறித்ததுடன், ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் இரண்டிலும் NPP முன் எப்போதும் இல்லாத வெற்றியின் உச்சத்தை அடைந்துள்ளது. இந்த வெற்றிகள் இரண்டாம் கட்டத்தின் உச்சத்தை மட்டுமல்லாமல் நாட்டின் அரசியல் நிலப்பரப்பில் அமைப்பு மாற்றத்திற்கான சாத்தியத்தையும் குறிக்கின்றன.

எனினும், இந்த ஆய்வுக் கட்டுரை அரகலய போராட்டத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கான பயணம் இன்னும் நிறைவு பெறவில்லை என்பதை வாதிடுகிறது. இயக்கத்தின் முதல் மற்றும் இரண்டாம் கட்டங்களில் கற்பனை செய்யப்பட்ட முறையான மாற்றங்களை

அடைய, பங்கேற்பு ஜனநாயக முறைகள் பரிசோதிக்கப்படும் அடுத்த கட்டமும் தேவைப்படுகிறது. இந்தக் கற்பனை செய்யப்பட்ட மூன்றாம் கட்டத்தில், நிர்வாகம் பாரம்பரிய படிநிலையுடனான மாதிரிகளை வெறுமனே மீளுருவாக்கம் செய்யாமல், எல்லா நிலைகளிலும் முடிவெடுக்கும் செயல்முறைகளில் குடிமக்கள், அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகத்தை செயலூக்கமாக ஈடுபடுத்தும். இந்த மாற்றமானது பங்கேற்பு நடைமுறைகளை நிறுவனமயப்படுத்துவது, அடிமட்ட பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வது போன்று / சமத்துவம், பொறுப்புக் கூறல் மற்றும் நீதியின் கொள்கைகளை உள்ளடக்கிய ஒத்துழைப்பு கொள்கை உருவாக்கும் கட்டமைப்புகளை வளர்ப்பது ஆகியனவற்றை சம்பந்தப்படுத்தும்.

எனவே அரகலய போராட்டம் வெறும் எதிர்ப்பின் ஒரு தருணத்தை மட்டுமல்ல, ஒரு மாற்றுச் செயல்முறையை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இது இலங்கையின் அரசியல் உணர்வையும் அதன் நிர்வாக கட்டமைப்புகளையும் மறுவரையறை செய்வதைத் தொடர்கின்றது.

### உசாத்துணை நூல்கள்

Giugni, Marco, Doug McAdam, and Charles Tilly, eds. *How Social Movements Matter*. Minneapolis: University of Minnesota Press, 1999.

Gamson, William A. *The Strategy of Social Protest*. 2nd ed. Belmont, CA: Wadsworth Publishing, 1990.

Bourdieu, Pierre. *Outline of a Theory of Practice*. Translated by Richard Nice. Cambridge: Cambridge University Press, 1977.

Peiris, Pradeep. *Catch-All Parties and Party-Voter Nexus in Sri Lanka.* Palgrave Mcmillan, 2022

Peiris, Pradeep. "Can the National People's Power Consolidate Its Presidential Victory in the Parliamentary Election?" *Polity,* November 12, 2024.
https://polity.lk/can-the-national-peoples-power-consolidate-its-presidential-victory-in-the-parliamentary-election-pradeep-peiris/

இந்த ஆய்வுக் கட்டுரை அரகலய போராட்டத்தின் ஜூலை 09 ஆம் திகதியின் அற்புதமான நிகழ்வுடன் உச்சத்தை அடையவில்லை, மாறாக தனது தந்திரோபாயங்களை மாற்றி, புதிய செயற்பாட்டாளர்களை பல்வேறு கட்டங்களில் இணைத்துக்கொண்டு செயற்திறனுடன் பரிணமித்துள்ளதென வாதிட்டுள்ளது. நேரடி ஜனநாயக முறைகள் மற்றும் அடிமட்ட அணிதிரட்டல் ஆகியவற்றை இலட்சணங்களாகக் கொண்ட ஆரம்ப கட்டம், அரகலய போராட்டத்தின் அபிலாஷைகள் பிரதிநிதித்துவ ஜனநாயக செயல்முறைகள் மூலம் இரண்டாம் கட்டத்திற்கு இடம் கொடுத்தது. இம்மாற்றம் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க தருணத்தை குறித்ததுடன், ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் இரண்டிலும் NPP முன் எப்போதும் இல்லாத வெற்றியின் உச்சத்தை அடைந்துள்ளது. இந்த வெற்றிகள் இரண்டாம் கட்டத்தின் உச்சத்தை மட்டுமல்லாமல் நாட்டின் அரசியல் நிலப்பரப்பில் அமைப்பு மாற்றத்திற்கான சாத்தியத்தையும் குறிக்கின்றன.

வெளியீடு : சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை
102/3, பார்ன்ஸ் பிளேஸ், கொழும்பு 07
தொலைபேசி : +94 11 2691228
+94 11 2684845
+94 11 2684853
தொலைநகல் : +94 11 2686843
மின்னஞ்சல் : info@lstlanka.org
வலைத்தளம் : www.lstlanka.org

LAW & SOCIETY TRUST
නීතිය හා සමාජ භාරය
சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை

ISBN 978-624-5545-34-6
9 786245 545346